## மே - 16

**"கர்த்தருடைய வாய் சொல்லும், புது நாமத்தால் நீ அழைக்கப்படுவாய். நீ கர்த்தருடைய கையில் அலங்காரமான கிரீடமும், உன் தேவனுடைய கரத்தில் ராஜ முடியுமாயிருப்பாய்." - ஏசா 62 : 2, 3.**

நாம் ஒரு விசித்திர ஜனமாகவும் பேர் கிறிஸ்தவர்களின் அந்தப் பெரியத் தொகுதியிலிருந்தும், உலகத்திலிருந்தும் பிரிந்திருக்கிறவர்களாகவும், உயர்வான நம்பிக்கைகளையும் குறிக்கோள்களையும், முன்னேறும் ஆசைகளையும் உடையவர்களாகவும், தேவனின் பார்வையைப்பெற அருள்செய்யப்பட்டு நம்முடைய முந்திய அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைக்கப்பட்டவர்களுமாயிருக்கிறோம் என்பதை நாம் ஒருபோதும் மறவாதிருப்போமாக. உலக ஆவியில் அதிகமாய் பங்கு கொள்ளுகிற உலகத்தாரிடமிருந்தும், கிறிஸ்தவர்களிடமிருந்தும் பிரிந்திருக்கிறோமென்றால், அவர்கள் எல்லாரும் நம்மைப் புறக்கணித்தோ அல்லது எதிர்த்தோ இவ்வாறாக நம்மோடு இணக்கமில்லாதவர்களாக இருக்கிறதை நாம் கண்டால், அதில் என்ன ஆச்சரியமிருக்கிறது? குறிப்பு: ஆங்கிலத்தில் "விசித்திர ஜனம்" என்றிருக்கிறது.

**- Z '03, 164 (R 3199)**

நாமம் என்ற வார்த்தை வேதாகமத்தில், பெயர், சுபாவம், குணம், கணம், ஸ்தானம், வேலை என்ற அர்த்தத்தில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. விசேஷமாக, புது சுபாவம், ஸ்தானம் என்ற அர்த்தத்தில் கிறிஸ்து (தலையும் சரீரமும்) ஒரு புது நாமத்தை உடையவர்களாயிருக்கிறார்கள். அப்படியிருக்கிறதினால், உண்மையாகவே, கர்த்தரின் கரங்களிலிருக்கிற ஒளிக்கதிர் வீசுகிற அநேக விலையுயர்ந்த கற்கள் கொண்ட ஒரு மகிமையான கிரீடமாகவும் இருந்து முழு மானிட குடும்பத்தின் ஆசீர்வாதங்களுக்காக, தெய்வீக சத்தியம், குணம், வேலை ஆகிய இவைகளை பிரதிபலித்திக்கொண்டிருப்பார்கள்.

**- P '35, 62.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

சங் 122:6; 102:13-16; ஏசா 60:1-3; வெளி 2:17; 21:2,9,10,17,23,24; எசே 48:35; 11:16; 33:16; எபி 12:22; கலா 4:26; நீதி 12:4; சங் 132:18; உண் 3:11; வெளி 19:12; 1தெச 2:19.

**கோபுர வாசிப்பு : Z '11, 413 (R 4913)**

**வினாக்கள்** : இந்த வாரத்தில் நமது நம்பிக்கை என்னில் எவ்வாறு கிரியை செய்தது? எவ்வித அனுபவங்களுக்கிடையில்? அதில் அனுகூலமாயிருந்தது அல்லது பிரதிகூலமாயிருந்தது எது? அதின் பலன் என்ன?